# இந்திய உயர் ஸ்தானிகரின் சுதந்திர தினச் செய்தி

இந்தியா தனது மேன்மைக்குரிய 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் நிலையில், இலங்கையிலுள்ள சக இந்தியர்கள் மற்றும் இலங்கை மக்கள் அனைவருக்கும் நான் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். உலகளாவிய ரீதியில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும் கொவிட் 19 சவால்கள், எமது இரு நாடுகளிலுமுள்ள வலுவான தலைமைத்துவங்களின் வழிகாட்டுதல்கள் மூலமாக வெற்றிகொள்ளப்பட்டு இந்திய இலங்கை இரு தரப்பு உறவு ஸ்திரமாக முன்னேற்றமடைந்துள்ளது. எமது இரு பிரதமர்களிடையில் 2020 செப்டெம்பரில் இடம்பெற்ற முதலாவது மெய்நிகர் மாநாடு, இவ்வருடம் இந்திய வெளியுறவு அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலாவது வெளிநாட்டு விஜயமான இலங்கைக்கான விஜயம், 2020 நவம்பரில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் இலங்கை விஜயம் ஆகியவை பரஸ்பர நலன்கள் அடிப்படையிலான சகல துறைகளிலுமான ஒத்துழைப்புக்குரிய திட்டங்களை ஒழுங்கமைத்திருந்தன.

2. அத்துடன் மக்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்கள் இந்நாட்டில் வாழும் சாதாரண மக்களின் வாழ்க்கையில் அர்த்தம் நிறைந்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. 2017இல் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை மூலமாக கிடைக்கப்பெற்ற மிக முக்கியமான பெறுபேறுகளில் ஒன்றான சுவசெரிய 1990 அம்புலன்ஸ் சேவை கொவிட் நிலைமையில் இலங்கை மக்களுக்காக பாரிய சேவையினை வழங்கியுள்ளது, இச்சேவை உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் முதல் ஆளுமை விருத்தி செயற்பாடுகள் வரையிலான பல்வேறு உதாரணங்களை இந்தச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட முடியும்.

3. கடந்தவருடம், கொவிட் 19க்கு எதிரான இலங்கையின் போராட்டத்தில் இந்தியா முக்கிய பங்காளராக இருக்கும் அதேநேரம் புதிய முயற்சிகளில் நீண்டகால மற்றும் நம்பகமான பங்காளராகவும் இந்தியா உள்ளது. எம் டி நியூ டைமன்ட் கப்பல் மற்றும் எம் வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஆகியவற்றில் ஏற்பட்டிருந்த தீயினை கட்டுப்படுத்தும் முயற்சியில் பங்களிப்பு வழங்கியமை, அதேபோல இவ்வருடம் ஜனவரியில் இலங்கை தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக கொவிஷீல்ட் தடுப்பூசியினை வழங்கியமை மூலம் இந்தியா முதலில் பதிலளித்து செயற்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையில் அக்கறை செலுத்தி வரும் நிலையில் அத்திட்டத்திற்கு மேலும் வலுவூட்டும் விதமாக இலங்கையில் சூரியகல மின்சக்தி திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகை அடிப்படையிலான கடன் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இரு நாடுகளினதும் மக்களின் பொதுவான செழிப்புக்காக சிறந்த பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் உட்கட்டமைப்பு, சக்தி துறை, தொடர்பாடல், சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய துறைகளிலும் இதேபோன்ற திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியா உறுதியுடன் உள்ளது.

4. கொவிட்-19 இரு நாடுகளிலும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையிலும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் அத்துடன் சரநாத்திலுள்ள முல்கந்தகுடி விகாரை உள்ளடங்கலாக இரு நாடுகளிலும் பல்வேறு இடங்களில் இரு நாட்டு மக்களினதும் நலன்களை வேண்டி சிறப்பு பிரார்த்தனைகள் வழிபாடுகள் நடைபெற்றிருந்தன. இலங்கை விமானப்படையின் எழுபதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளில்

இலங்கையில் முன்னொருபோதும் இடம்பெற்றிருக்காத வகையில் நடைபெற்ற வான் சாகச கண்காட்சியில் இந்தியாவும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை இருநாடுகளினதும் ஒத்துழைப்பு, இருதரப்பு ஆயுதப் படைகள் இடையிலான தோழமை மற்றும் நட்புறவினைக் காண்பிக்கின்றது.

5. கொவிட் சவால்களின் நிழல்களுக்கு மத்தியில் அதிகரித்துவரும் முதலீடுகள் மற்றும் ஏற்றுமதித்துறையின் துரித வளர்ச்சி ஆகியவற்றுடன் ஆத்மநிர்பார் பாரத் (சுயசார்பு இந்தியா) நிலைபேறான முன்னேற்றத்தைக் கண்டுவருகிறது, சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் மீதான விசேட கவனத்துடன் எதிர்காலத்தில் இலங்கை இந்தியா இடையிலான பழமையானதும் மிகவும் நெருக்கமானதுமான நாகரீக உறவினை எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் வலுவாக்குவதில் நானும் உயர் ஸ்தானிகராலயத்திலுள்ள எனது சகபாடிகளும் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

(கோபால் பாக்லே)